# சிறப்பு மலர்

## இரண்டாவது உலக இந்து மகாநாடு

## இலங்கை

## 2003

"தர்மத்தின் வழியில் சமாதானம் காண்போம்"

- இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு -

# வன்னிப் பிரதேச வழிபாட்டு மரபுகள்

- சமய், சமூக நிலை நின்ற ஆய்வு -

- ம. இரகுநாதன் -

'வன்னி' என்பது அரசியல் அடிப்படையில் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய பரந்த பிரதேசத்தினையே குறிப்பதாகும். அண்மைக் காலத்தில் கிளிநொச்சிப் பிரதேசம் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட பின்னர் ஆனையிறவுக்கு அப்பால் உள்ள பகுதி முழுவதுமே வன்னிப் பெருநிலப் பரப்பாகக் கொள்ளப்படுகின்றது. அரசியல் அடிப்படையிலான வரையறைகள் இவ்வாறு இருப்பினும் உணர்வுரீதியாக வன்னி என்ற சொல் வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களிலுள்ள மிகவும் பின்தங்கிய பகுதிகளைக் குறித்து நிற்பதையே அவதானிக்க முடிகின்றது. இப்பிரதேசங்கள் குளமும் குளம்சார் குடியிருப்புக்களையும் கொண்ட சிறிய சிறிய கிராமங்களாகவே காணப்படுகின்றன. வன்னிப் பிரதேசத்தின் சமூக பண்பாட்டு அடிப்படையினைத் தேடும் ஆய்வாளனுக்கு இக்கிராமங்களே பெரிதும் பயன்படத்தக்கவையாகும்.

குளமும் குளம் சார்ந்த குடியிருப்புக்களையுமே பெருவாரியாகக் கொண்ட வன்னிப் பிரதேச மக்களின் பிரதான பொருளாதார நடவடிக்கையாக விளங்குவது விவசாய உற்பத்தியே எனினும் இவர்கள் மந்தை வளர்த்தல், வேட்டையாடுதல் மீன்பிடித்தல் முதலிய தொழில்களிலும் ஈடுபட்டுவருகின்றனர். இவர்களின் பொருளாதார முயற்சிகள் அனைத்தும் இயற்கை வளங்களிலே தங்கியிருப்பனவாகவே அமைந்துள்ளன. பருவமழை பொய்த்தால் பயிர் நடவடிக்கைகள் பாதிக்கப்படும்; காட்டில் வேட்டையாடச் செல்லும்போது கொடிய வனவிலங்குகளால் உயிருக்கு ஆபத்து நேரிடுகின்றது; பாதை மாறும்போது வீட்டிற்கு வந்த சேருவது நிச்சயமில்லாமற் போகின்றது; வளர்ப்பு மந்தைகள் மேய்ச்சல் நிலங்களிலிருந்து காணாமற்போய் விடுகின்றன; காரணம் தெரியாமலே மந்தைகள் இறந்து விடுகின்றன; இத்தகைய சந்தர்ப்பங்களிலெல்லாம் இந்த மனிதன் தனது சக்தியைவிட மேலான ஒரு சக்தியின் மீது நம்பிக்கை வைக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆபத்தை விளைவிக்கும் விலங்குகளுக்கு அடிபணிந்து வழிபட்டால் அவை தமக்கு ஊறுவிளைவிக்கா என்றும் இவன் நம்பினான். இதனால் யானை, பாம்பு, போன்ற விலங்குகளையும் உருவம் அறியாத சில நம்பிக்கைகளையும் அவன் பல்வேறு பெயர்களில் வழிபட்டான். இவை காலப்போக்கில் பல்வேறு தெய்வங்களாக வீடுகளிலும் வயல்வெளிகளிலும் காடுகளிலும் பாதைஓர மரநிழல்களிலும் வழிபாட்டிடங்கள் அமைக்கப்பட்டும் படாமலும் வழிபடப்பட்டு வருகின்றன. ஆகம வழிபாட்டு மரபின் செல்வாக்கு வன்னிப் பிரதேசத்தில் நுழைந்தபோது ஒருசில வழிபாட்டிடங்கள் ஆகம மரபினுள் உள்வாங்கப்பட்டாலும் அவற்றிலும் கிராமிய வழிபாட்டு மரபின் தன்மை இன்னும் நிலைத்திருப்பதைக் காணமுடிகின்றது. இது வன்னிப் பிரதேசத்தில் ஆகம வழிபாட்டு மரபினைவிட ஆகம மரபு சாராத சிறுதெய்வ வழிபாட்டு மரபே முக்கியத்துவம் உடையதாக விளங்குவதையே எடுத்துக் காட்டுகின்றது

வன்னிப் பிரதேசத்தில் கண்ணகி, நாக தம்பிரான், சப்தகன்னியர், ஐயன், வயிரவர், வீரபத்திரர், பத்திரகாளி, வன்னித்தெய்வம், வதனமார், அண்ணமார், கிருஷ்ணன் ஆகிய தெய்வங்களுக்கு ஆகமவழிபாட்டு மரபு சாராத வழிபாட்டிடங்களும் பிள்ளையார், முருகன், சிவன் ஆகிய தெய்வங்களுக்கு ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட வழிபாட்டிடங்களும் அமைந்துள்ளன. வயிரவர் வீரபத்திரர் ஆகிய தெய்வங்களை ஆகம மரபினுள் இணைத்துப் பெருந் தெய்வங்களாகவும் சிலர் கூறுவர். இதனால் சிறுதெய்வம், பெருந்தெய்வம் என்ற பாகுபாட்டின் இறுக்கமான விதிகள் இருப்பதாகக் கருத முடியவில்லை.

### கண்ணகி

வன்னிப் பிரதேச மக்களிடையே மிகவும் பிரசித்தி பெற்ற தெய்வமாக விளங்குவது கண்ணகி அம்மன் ஆகும். கண்ணகியின் சீற்றத்தால் அம்மை, கொப்புளிப்பான், கண்நோய் முதலிய வெப்பு நோய்கள் உண்டாகின்றன என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வன்னிப் பிரதேசத்தில் கண்ணகி அம்மனுக்குப் பல வழிபாட்டிடங்கள் உள்ளன. வற்றாப்பளை, முள்ளியவளை, சிலாவத்தை, கற்கிடங்கு, பனையாண்டான், அரியாமடு, கொக்குளாய், குமுளமுனை முதலிய வன்னிக் கிராமங்கள் பலவற்றிலும் கண்ணகியம்மனுக்குரிய வழிபாட்டிடங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். இங்கெல்லாம் ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் கண்ணகி யம்மனுக்குச் சிறப்பான பொங்கல் வழிபாடுகள் நடைபெறுகின்றன. இவற்றில் முள்ளியவளையிலும் வற்றாப்பளையிலும் நடை பெறுகின்ற பொங்கல் வழிபாடு ஏனைய இடங்களிலில்லாத பல சிறப்புக்களைக் கொண்டு விளங்குகிறது.

வைகாசித் திங்களில் விசாக நட்சத்திரம் கூடிய பூரணை வருகின்ற வாரத்துத் திங்கட்கிழமையில் வற்றாப்பளையிலும் இதற்கு முந்திய இரண்டு வாரங்கள் முள்ளிவளையிலும் இப்பொங்கல் நிகழ்ச்சிகள் பெருவிழாவாகவே கொண்டாடப் படுகின்றன. முள்ளியவளையில் இரண்டு வாரங்களாக நடைபெறும் இவ்விழாவின் ஆரம்ப நிகழச்சியாக பாக்குத்தெண்டல் இடம்பெறும். முதலாவது திங்கட்கிழமை அதிகாலை முள்ளியவளைக் காட்டா விநாயகர் கோயிலிலிருந்து புறப்படும் பொங்கற் குழுவினர் முள்ளிவளையிலும் அதன் அயற் கிராமங்கள் சிலவற்றிலுமிருந்து பூசைக்குரிய மங்கலப் பொருட்களாக வெற்றிலை, பாக்கு, மஞ்சல் ஆகியவற்றைச் சேகரித்து வருவதும் பின்னர் இவற்றிலுள்ள பாக்கினை மஞ்சள் நிறத் துணியிலே வைத்து கோயில் வளவிலுள்ள வேப்பமரத்திலே கட்டித் தொங்க விடுவதுமான நிகழ்ச்சியே பாக்குத்தெண்டல் எனப்படும்.

இதனையடுத்து இரண்டாவது திங்கட் கிழமை முள்ளியவளையிலிருந்து சுமார் ஏழுமைல் தொலை விலுள்ள சிலாவத்தை என்னும் கடற்கரைக் கிராமத்திற்கு ஊர்வலமாகச் சென்று கடல்நீரை அள்ளிவருவது தீர்த்தமெடுத்தல் நிகழ்ச்சியாகும். இவ்வாறு கொண்டுவரப்பட்ட புனித தீர்த்தம் முள்ளியவளை காட்டா விநாயகர் கோயிலிலுள்ள அம்மன் மண்டபத்தில் வைக்கப்படும். இதனைத் தொடர்ந்து புனித தீர்த்தத்தில் அம்மனுக்கு விளக்கேற்றி விசேட வழிபாடுகள் நடைபெறும்.

மேற்படி வழிபாட்டு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை இரவு பொங்கல் நிகழ்ச்சி நடைபெறும். ஊர்ப் பெருவிழாவாகவே நடைபெறுகின்ற இந்நிகழ்ச்சியே முள்ளியவளையில் நடைபெறுகின்ற இறுதி நிகழ்ச்சியாகும். இதனைத் தொடர்ந்து மறுநாள் அதாவது மூன்றாவது திங்கட் கிழமை அதிகாலை பூசைக்குரிய பொருட்களுடன் வற்றாப்பளைக்குச் செல்லும் பொங்கற் குழுவினர் அங்கு அம்மனுக்குரிய பொங்கலை நிகழ்த்துவர். இதுவே பொங்கலின் இறுதி நிகழ்ச்சியாகும்.

இவ்வழிபாட்டு மரபில் பாக்குத்தெண்டல் முதல் பொங்கல் வரை நடைபெறும் சகல நடவடிக்கை களையும் பிராமணர் அல்லாதவர்களே செய்து வருகின்றனர். சடங்குரீதியாக நடைபெறும் நிகழ்ச்சிகளிற் கூட பிராமணர்களுக்கு இடமளிக்கப் படுவதில்லை. எனினும் அண்மைக் காலங்களில் நாவலரின் செல்வாக்கினால் கண்ணகி அம்மன் கோயில்கள் புவனேஸ்வரியம்மனாகவும் இராஜேஸ்வரி யம்மனாகவும் பிரதிட்டை செய்யப்பட்டு கும்பா பிஷேகம் செய்யப்பட்டபின்னர் பிரதிட்டை செய்யப்பட்ட மூலமூர்த்தியின் பூசைகளைப் பிராமணர்கள் செய்துவருகின்றனர்.

### ஐயன்

வன்னிப் பிரதேச மக்கள் ஐயனைக் காவல் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். காட்டுப் பிரதேசங்களில் வாழ்வதாலும் காடுகளினூடாகப் பயணம் செய்வதாலும், காடுகளில் வேட்டையாடச் செல்வதாலும் இவர்கள் பேய்கள், வனவிலங்குகள் முதலியவற்றுக்கு அஞ்சுகின்றனர். இத்தகைய வேளைகளில் ஐயனை வழிபட்டால் அல்லது அவரது

நாமத்தை உச்சரித்தால் அவர் ஆபத்திலிருந்து தம்மைக் காப்பாற்றுவார் என்பது இவர்களது நம்பிக்கை. இந்த நம்பிக்கையினை இப்பிரதேசத்தில் வழங்குகின்ற வாய்மொழிப் பாடலொன்று தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

மாதம் மும்மாரி பெய்து மானிலம் செழித்திடவே
செந்நெல் கழனியெல்லாம் நெல்பொலிய வைத்து
நோய்நொடிகள் வாராது நாட்டவரைக் காத்து
காடுமலைப் பாதைகளில் கண்டபடி தான் திரியும்
கரடியொடு புலியும் கனத்த மத யானைகளும்
காடேறி முனியும் கண்டாராம் பேய்களும்
ஐயனே என்று அலறி நாம் கூப்பிட்டால்
அடவியில் நில்லாது அனைத்தையும் ஓடவைக்கும்
...............................

வன்னியில் குருந்தூர்மலை, முள்ளிவளைக் கோட்டை, ஆண்டான் குளம், நெடுங்கேணி, சின்னடம்பன் முதலிய இடங்களில் மிகவும் பழமை வாய்ந்த ஐயனுக்குரிய வழிபாட்டிடங்கள் உள்ளன. நெடுங்கேணியிலுள்ள சடவங்குளத்து ஐயனுக்கு ஆண்டுதோறும் பொங்கல் நடைபெறுகின்றது. பொங்கலைப் பிராமணர் அல்லாத பூசாரி ஒருவரே நடாத்துகின்றார். பொங்கல் வழிபாட்டின்போது பூசாரியார் உருக்கொண்டு ஆடுவதும் கூடிநிற்கும் பக்தர்களுக்குக் குறைதீர்க்கும் வண்ணம் வாக்குக் கூறுவதும் வழக்கம். அவ்வேளையில் பூசாரிமீது தெய்வம் வந்து நிற்பதாகவே மக்கள் நம்புகின்றார்கள்.

பொங்கல் முடிந்த பின்னர் பூசாரியார் மக்களுக்கு வழங்கும் பிரசாதம் 'கோயில் மருந்து' எனப்படும். இது பெருங்காயம், உள்ளி, நற்சீரகம், வேர்க்கொம்பு, மஞ்சல், பனங்கற்கண்டு முதலிய வற்றைச் சேர்த்து இடித்து உருண்டையாக்கப் பட்டதாக இருக்கும். காட்டுப்பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் வைத்திய வசதிகள் இல்லாததால் திடீரென நோயுற்றபோது கைமருந்தாக இக்கோயில் மருந்தைப் பயன்படுத்துகின்றனர். இதை நீரிற் கரைத்துக் குடித்ததும் நோய் தணிந்துவிடும் என்பது இவர்களது நம்பிக்கை.

## நாகதம்பிரான்

'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்பது பழமொழி. காட்டுப்பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுக்கு பாம்புகள் அச்சத்தைத் தருவன வாகவுள்ளன. இம்மக்களிடையே பாம்புக் கடியால் இறப்பவர்களின் தொகையும் அதிகமாகும். வனவிலங்குகளில் சிங்கம், காட்டுராஜா எனப்படுவது போல் பாம்புகளில் நாகமே தலையானதாகக் கருதப்படுகின்றது. இதனால் நாகத்தை வழிபட்டு பாம்புகளின் சீற்றத்திலிருந்து தப்பிவிடலாம் என்பது இம்மக்களின் நம்பிக்கை.

நாகவழிபாட்டிற்கென அமைந்துள்ள வழிபாட்டிடங்களை புதூர், புளியம் பொக்கணை, கற்சிலைமடு, மதவுவைத்த குளம், குருந்தூர்க் குளம் முதலிய இடங்களிற் காணலாம். இவற்றுள் புதூர், புளியம்பொக்கணை ஆகிய இடங்கள் பிரசித்தி பெற்றவை. இங்கு வைகாசி மாதத்தில் பொங்கல் வழிபாடு நடைபெறுகின்றது. பொங்கலைப் பிராமணர் அல்லாத வேறுசாதிப் பூசாரியே நடத்துகின்றார். பொங்கலின்போது பலியிடுவதும் முக்கியமான தொரு அம்சமாகும். புதூரிலும், புளியம் பொக்கணையிலும் பொங்கலின்போது வழங்கப் படும் 'மருந்து' விஷக்கடியினால் ஏற்படும் ஆபத்தைப் போக்கக்கூடியது என்று நம்பப்படுகின்றது. இவ்வாலயங்களில் நாகம் உறைந்துள்ள மரத்தின் அடியிலுள்ள மண்ணே மருந்தாக வழங்கப் படுகின்றது. பாம்புக்கடியுண்டவர்கள் இம் மண்ணைக் கரைத்துக் குடிப்பதால் உயிர் தப்பி விடலாம் என்று நம்புகின்றனர். இப் பிரதேசத்திலுள்ள விஷக்கடி வைத்தியர்களும் இம்மருந்தைப் பயன்படுத்துகின்றனர்.

## நாச்சிமார் வழிபாடு

சப்த கன்னியர்கள் எனப்படும் ஏழு மாதர்களைக் குறிக்கும் நாச்சிமார் வழிபாடும் வன்னிப் பிரதேசத்திலே இடம்பெற்று வருகின்றது. இவ்வழிபாடு தென்னிந்தியாவில் இருந்தே இலங்கைக்குப் பரவியது என்றும் வன்னியில் இத் தெய்வங்களுக்கு அமைக்கப்பட்ட கோயில்களை ஒட்டுசுட்டானுக்கும் புதுக்குடியிருப்புக்கும் இடையே யுள்ள மன்னாகண்டலில் காணலாம் என்றும் சி. எஸ். நவரட்ணம் குறிப்பிடுகின்றார் (Vanni and the Vanniyas P.36). தற்போதைய நிலையில் முல்லைத்தீவிலுள்ள வட்டுவாகல் என்னும் கிராமத்திலேயே சப்தகன்னியருக்கான கோயிலொன்று அமைந் திருப்பதைக் காண முடிகின்றது. இவ்வாலயத்தில் ஆண்டுக்கொருமுறை ஆனி மாதத்தில் பௌர்ணமித் திதியையடுத்து திருவோண நட்சத்திரத்திற்கு முன்பின்னாக வரும் திங்கட் கிழமையன்று பொங்கல் நடைபெற்று வருகின்றது.

பொங்கல் நிகழ்ச்சிகளை நடாத்துபவர் கோவியர் சமூகத்தைச் சேர்ந்த ஒரு பூசாரியே. இவர் மஞ்சட் காவியுடுத்து தலையை மூடி மஞ்சட்

துணியாற் கட்டிப் பின்னாற் தொங்கவிட்டு, கையிற் பிரம்புடன் ஆடியும் ஓடியும் பல வித்தைகளைப் புரிந்து பொங்கலிடுகின்றார்.

### பத்திரகாளி

பத்திரகாளிக்கு வன்னிப் பிரதேசத்தில் எங்குமே கோயில் கட்டப்படவில்லை. ஆனால் வயல்களில் அறுவடை முடிந்த பின்னர் பத்திரகாளிக்கு மடைபரவிப் பொங்கலிடுகின்றனர். இவ் வழி பாட்டிற்கு பூசாரி என்று எவருமே இருப்பதில்லை. மடைபோடுபவர்களே ஆசாரமாக நின்று அதனை நடாத்துகின்றனர்.

### முத்தமாரி அம்மன்

வன்னிப் பிரதேசத்தில் வவுனியா, புதுக் குடியிருப்பு, வன்னிவிளாங்குளம், பாவற்குளம், பாவற்காய்க்குளம் போன்ற பல இடங்களில் முத்துமாரி அம்மனுக்கு வழிபாட்டிடங்கள் இருப்பதைக் காணமுடிகின்றது. வவுனியாவில் உள்ள முத்துமாரி அம்மனுக்கு ஆனிமாதத்திலே பொங்கல் நடைபெறுகின்றது. பொங்கல் வழிபாட்டில் பலியிடுதலும் முக்கியமாக இடம்பெற்று வருகின்றது. இவ்வாலயங்கள் தற்போது கும்பாபிஷேகம் செய்யப்பட்டு ஆகம வழிபாட்டு மரபிற்குள் உள்வாங்கப்பட்டாலும் கிராமிய வழிபாட்டு மரபினை முற்றாகக் கைவிடாத நிலை இருப்பதைக் காணமுடிகின்றது.

### வீரபத்திரர்

யாழ்ப்பாணத்தில் வீரபத்திரருக்கு ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட கோயில் உள்ளது. வன்னியில் வீரபத்திரரை வீடுகளில் காவல் தெய்வமாகவே வழிபட்டு வருகின்றனர். 'வீரபத்திரன் வீடுபத்திரம்' என்ற பழமொழியும் இதையே உணர்த்துகின்றது.

### வைரவர்

வீரபத்திரர் போலவே வைரவரும் காவல் தெய்வமாக வழிபடப்பட்டு வருபவர். எனினும் வைரவர், வீடுகளில் மாத்திரமின்றி வெளி யிடங்களிலும் மரநிழல்களில் சூலங்கள் நாட்டப் பட்டு வழிபடப் பட்டு வருகின்றார். முள்ளிய வளையில் வைரவருக்கான சிறிய கோயிலொன்று காணப் படுகின்றது. இதனைக் கோவியர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரே பூசாரியராக நின்று பராமரித்தும் பூசை செய்தும் வருகின்றார்.

### வன்னியில் தெய்வம், வதனமார், அண்ணமார்

காட்டில் மாடுகள் காணாமல் போனபோதும் கால்நடைகளுக்கு நோய்வந்தபோதும் மேற்படி தெய்வங்களுக்கு நேர்த்தி வைத்துப் பொங்கலிடு கின்றனர். நேர்த்திக்காக, உரிக்காத தேங்காய் ஒன்றினை வேப்பமரத்திலே கட்டித்தொங்கவிடுவர். பின்பு ஆண்களாற் குற்றி எடுக்கப்பட்ட அரிசியையும் நேர்த்தி வைத்த தேங்காயினையும் எடுத்துச் சென்று காட்டிலே பொங்கலிடுவர். இப்பொங்கல் அமுது சமைத்தல் எனப்படும். இதில் பெண்கள் எவரும் பங்குபற்றுவதில்லை. சமைத்த அமுதினை மூன்று கம்புகளை முக்கோணமாகக் கட்டி உருவாக்கிய முக்காலியில் வைத்துப் படைப்பர். மூன்று கம்புகளும் மேற்படி தெய்வங்கள் மாடுகளைச் சாய்த்து வருவதற்காக வைக்கப்படுபவையாகும். முல்லைத் தீவிலே கோடாலிக்கல்லு என்னும் இடத்திலுள்ள காட்டில் இப்பொங்கலுக்கென விசேடமான வழிபாட்டிடம் உள்ளது. இந்த இடம் கட்டடங்கள் எதவுமற்ற வெறும் வெளியாக இருப்பினும் இவ்விடமே வழிபாட்டி டமாகக் கொள்ளப் படுகின்றது.

### கிருஷ்ணன் வழிபாடு

முல்லைத்தீவில் மாமூலை என்னும் கிராமத்தில் கிருஷ்ணனுக்கு வழிபாட்டிடம் ஒன்று உள்ளது. சிறுதெய்வ வழிபாட்டு மரபிலேயே வழிபடப்பட்டு வரும் இத் தெய்வத்தைப் பிராமணர் அல்லாத ஒருவரே பூசாரியாக நின்று வழிபாடியற்றி வருகின்றார். இங்கு மகாபாரதப் படிப்பும் இடம் பெற்று வருகின்றது.

### ஆகம மரபினுள் உள்வாங்கப்பட்ட தெய்வங்கள்

விவசாய வாழ்வின் தன்மைக்கேற்ப கிராமிய வழிபாட்டு மரபினைப் பின்பற்றிவந்த மக்களிடையே ஆகம வழிபாட்டு மரபின் செல்வாக்கு உள்நுழைந்தபோது ஒருசில வழிபாட்டிடங்கள் கிராமிய வழிபாட்டு மரபிலிருந்து விடுபட்டு ஆகம மரபினைப்பின்பற்ற முற்பட்டன. சில இடங்களில் இரு மரபுகளையும் பின்பற்றுகின்ற நிலையும் எற்பட்டது.

### யானைமுகன் - பிள்ளையார்

வன்னிப் பிரதேசத்தில் பிள்ளையார் கோயில், விநாயகர் கோயில் என்ற பெயர்களில் பல வழிபாட்டிடங்கள் உள்ளன. பிள்ளையார் யானைமுகன் என்று உருவகிக்கப்படுவர். காட்டுப் பகுதிகளில் வாழ்பவர்களுக்குப் பாம்புபோல யானையும் உயிராபத்தை விளைவிக்கின்றது. யானைகள் குடியிருப்புக்களைத் தாக்கி அழிப்ப துடன் வயல்களையும் அழித்து விடுகின்றன. அறுவடைசெய்து சூடாகக் குவித்து வைத்த

பயிர்களை அவை முற்றாகவே சேதப்படுத்தி விடுகின்றன. வாழைகள் தென்னைகள் போன்ற பெரும் பயிர்கள்கூட யானைகளால் அழிக்கப்படுவது வழக்கம். யானைகளிலிருந்து பயிர்களையும் தம்மையும் பாதுகாப்பதற்கு வழியறியாத மக்கள். அச்சத்தால் யானையை வழிபடுகின்றனர். யானையை யானைமுகனாக்கி காட்டுப்பாதைகளிலும் மரநிழல் களிலும், குளக்கட்டிலும் வாழைப்பழமும், மோதகமும் படைத்துப் பொங்கலிடுகின்றனர். சடங்காசாரங்கள் எதுவுமே இல்லாத இந்த வழிபாட்டினை ஐயரோ பூசாரியோ எவருமே இல்லாமல் அவரவரே செய்து முடிப்பதே வழக்கம்.

விவசாயக் கிராமங்கள் அல்லாத ஓரளவு பட்டினவாக்கம் பெற்ற பகுதிகளில் யானைமுகன், வேழமுகத்து விநாயகனாக, பிள்ளையாராக ஆகம விதிப்படி வழிபடப்பட்டு வருவதையும் காணலாம். இந்த வகையில் வன்னிப் பிரதேசத்தில் காட்டா விநாயகர், சித்தி விநாயகர், கற்பக விநாயகர், மாணிக்க விநாயகர், கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார்., கோட்டகக்கேணிப் பிள்ளையார், வில்வையடிப் பிள்ளையார், கற்பகப் பிள்ளையார் எனப் பல பிள்ளையார் வழிபாட்டிடங்கள் உள்ளன.

முள்ளியவளையில் அமைந்துள்ள காட்டா விநாயகர் ஆலயம் பழமை வாய்ந்ததாகும். யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்களின் காலத்தில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் வையாபாடலில் பரராசசேரன் முள்ளிய வளையில் வாழ்ந்தது பற்றியும் ஊர்மூத்த நயினாருக்குக் கோயில் அமைத்தது பற்றியும் கூறப்படுகின்றது. ஊர்மூத்த நயினார் என்பது விநாயகரையே குறிப்பதால் இவ்வாலயம் பரராசசேகரன் காலத்தது எனத்துணியலாம். வையாபாடலில் கூறப்பட்ட பரரராசசேகரன் ஆறாம் பரராசசேகரன் என்றும் இவனது காலம் கி.பி. 1509 அளவில் இருக்கலாம் என்றும் வையாபாடல் பதிப்புரையில் க. செ. நடராசா குறிப்பிடுகின்றார்.

இப்பிரதேசத்திலுள்ள செவிவழிச் செய்தி களின்படி இவ்வாலயத்திலுள்ள விநாயகர் முள்ளியவளைக்கு அண்மையிலுள்ள வயற் பிரதேசமான மணற்குளம் என்ற பகுதியில் இருந்து கண்டுபிடிக்கபபட்டதாகத் தெரிகின்றது. எனவே இதன் ஆரம்பநிலை கிராமிய வழிபாட்டு நிலையிலேயே இருந்துள்ளது என ஊகிக்கலாம்.

இன்றைய நிலையில் இவ்வாலயம் ஆகம வழிபாட்டு மரபினைப் பின்பற்றி அமைக்கப் பட்டுள்ளது. தினமும் மூன்று வேளை பூசைகளும் விசேட உற்சவங்களும் நடைபெறுகின்றன. வைகாசி விசாகத்தில் கண்ணகி அம்மனுக்கு நடைபெறும் பொங்கல் நிகழ்ச்சிகளில் முக்கியமான நிகழ்ச்சிகள் இவ்வாலயத்திலேயே நடைபெறுகின்றன. இதனால் இது சைவத் தமிழ் மக்களிடையே பிரபல்யம் பெற்று விளங்குகின்றது.

வன்னியில் பட்டினவாக்கம் பெற்ற பல பகுதிகளில் பிள்ளையார் வழிபாடு ஆகம முறைப்படி நடைபெறுவதைக் காணலாம்.

வன்னிப்பிரதேசத்திலுள்ள பிள்ளையார் கோவில்களில் முறிகண்டிப் பிள்ளையார் கோவில் மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாகும். யாழ்ப்பாணம் - கண்டிவீதியில் மாங்குளத்திற்கு அண்மையில் இவ்வாலயம் அமைந்துள்ளது. தற்போது இவ் வாலயம் அமைந்துள்ள இடத்திலிருந்து மாங்குளம் நோக்கிச் சிறிது தூரத்திற்கு அப்பால் உள்ள ஓரிடத்திலேயே முன்பு இவ்வாலயம் இருந்தது. அவ்விடம் இன்றும் பழைய முறிகண்டி என்றே வழங்கப்படுகின்றது. தற்போதைய நிலையில் வீதியின் அருகில் பாலைமர நிழலில் சிறியதொரு கட்டடத்தில் பிள்ளையார் வீற்றிருக்கின்றார். இந்த வழியால் பிரயாணம் செய்பவர்கள் அனைவரும் வாகனங்களை நிறுத்திப் பிள்ளையாரை வழிபட்டுச் செல்வது வழக்கம். இன மத வேறுபாடின்றி அனைவருமே இங்கு வழிபடுகின்றனர். பிள்ளையாருக்கு நித்திய பூஜைகளும் நடைபெற்று வருகின்றன.

கண்டிவீதியின் இருமருங்கும் காடாகவே இருப்பதால் இப்பாதையில் யானைகள் குறுக் கறுப்பது வழக்கம். இப்பாதையாற் செல்லும் பிரயாணிகளுக்கு இந்த யானைகளின் அச்சுறுத்தல் இன்றுவரை இருந்து வருகின்றது. யானைகளின் அச்சுறுத்தலில் இருந்து தம்மைப் பாதுகாக்க முறிகண்டிப் பிள்ளையாரை வழிபட்டுப் பயணத்தைத் தொடர்ந்தனர்

மேலும் வன்னிப் பிரதேச மக்கள் முறிகண்டிப் பிள்ளையாருக்கு சில விசேட நேர்த்திகளையும் வைத்து வழிபடுகின்றனர். ஆண்குழந்தை கிடைக்க வேண்டும் என்பதற்காக முறிகண்டிப் பிள்ளை யாருக்கு நேர்த்திவைத்துப் பொங்கலிடுவதும் - பிள்ளைகளுக்கு துடக்கு முடியை இவ்வாலயத்தில் வைத்து வெட்டி நேர்த்தி முடிப்பதும் வழக்கம். அந்த வகையில் இவ்வாலயம் வன்னிப் பிரதேச மக்களிடையே பிரபல்யம் பெற்று விளங்கி வருகின்றது.

மக்கள் குடியிருப்புக்களோடு சேர்ந்ததாக இந்த ஆலயம் இல்லாமல் பாதையோரத்தில் இருப்பதால் இந்த ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து பரிபாலிப்பதில் சில சிக்கல்கள் காணப்பட்டன. எனினும் தற்போது நேர்த்திக் கடனுக்காக வருபவர்கள் தங்குவதற்கான மடம், கிணறு ஆகியன இங்கு அமைக்கப்பட்டுள்ளன.

**சிவவழிபாடு**

வன்னிப் பிரதேசத்தில் சிவவழிபாட்டுத் தலங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. மன்னார் மாவட்டத்தில் மாதோட்டப்பகுதியில் பாலாவிக் கரையில் அமைந்துள்ள திருக்கேதீச்சரம் சம்பந்தர், சுந்தரர் ஆகிய சைவ நாயன்மார்களாற் பாடப்பட்ட புராதன சிவாலயமாகும். மூர்த்தி, தலம் தீர்த்தம் ஆகியவற்றால் சிறப்புப் பெற்ற தலமாக இது கொள்ளப்படுகின்றது. கி.பி.11ஆம் நூற்றாண்டில் இராசேந்திர சோழனால் இக்கோயில் புனருத் தாரணம் செய்யப்பட்டதாகவும் பின்னர் கி.பி 1560 ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயர் இதனை இடித்ததாகவும் தெரியவருகிறது. 1872இல் ஆறுமுக நாவலர் இக்கோயிலைப் புனருத்தாரணம் செய்ய வேண்டும் என்று பெரிதும் முயன்றார். இதன் பயனாக 1903இல் கற்கோவிலாகக் கட்டப்பட்டு 1976இல் கும்பாபிசேகம் செய்யப்பட்டது.

ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகள் தவறாது நடைபெற்று வருகின்றன. வைகாசி விசாகத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறக்கூடியதாக பத்து நாட்களுக்கு மகோற்சவம் நடைபெறுகின்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து பெருமளவு பக்தர்கள் இதற்குச் சென்று வருவது வழக்கம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டி சுட்டானிலுள்ள தான்தோன்றீஸ்வரன் ஆலயமும் பழமைவாய்ந்த சிவாலயமாகும். இவ்வாலயத்தின் தோற்றம் பற்றி அறிவதற்குச் செவிவழிக்கதைகளே உதவுகின்றன. இக்கதைகளின்படி இப்பகுதியில் விவசாயம் செய்த ஒருவர் அறுவடையின் பின்பு ஒட்டுக்களத்துக்குத் தீயிட்டபோது கொன்றை மரமொன்றின்கீழ் இருந்த ஒட்டுக்கள் எரிய மறுத்ததாகவும் இந்த அதிசயத்தைக் கண்ட பலரும் இது தெய்வச் செயல் எனக் கருதி கொன்றை மரத்தின் கீழ், பிள்ளையாரை வைத்து வழிபட்டதாகவும் சில நாட்களின் பின்னர் இவ்விடத்தில் சிவலிங்கம் தோன்றியதாகவும் தெரியவருகின்றது. தானாகத் தோன்றியதாலேயே தான்தோன்றி ஈஸ்வரன் என்றும் ஒட்டுக்கள் வேகாத (எரியாத) இடத்தில் தோன்றியதால் வேகாவனேஸ்வரர் என்றும் பெயரிடப்பட்டதாகத் தெரிகின்றது.

இவ்வாறு ஆரம்பித்த சிவவழிபாடு சோழப் பெருமன்னர்களின் ஆட்சிக் காலத்தில் புதுப் பொலிவு பெற்றிருக்கலாம் என்று வையாபாடல், கோணேசர் கல்வெட்டு போன்ற நூல்கள் தரும் தகவல்களினூடாக ஊகிக்க முடிகின்றது.

தற்போது இவ்வாலயத்தில் ஆகம விதிப்படி மூன்றுவேளை பூசைகள் நடைபெறுகின்றன. ஆனிமாத அமாவாசையில் கொடியேறி பதினைந்து நாட்கள் திருவிழா நடைபெறுகின்றது. வேட்டைத் திருவிழா மிகவும் சிறப்பானதாகும்.

வவுனியாவிலுள்ள புதுவிளாங்குளத்தில் 1963 இல் சிவனுக்குரிய வழிபாட்டிடம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இங்கு ஆவணிப் பூரணையில் திருவிழா நடைபெறுகின்றது.

**முருக வழிபாடு**

வன்னியில் பழமைவாய்ந்த முருக வழிபாட்டிடங்கள் மிகவும் குறைவாகவே காணப் படுகின்றன. முள்ளியவளைக்கு அண்மையிலுள்ள குமாரபுரம் சித்திரவேலாயுதர் ஆலயமே வன்னியிலுள்ள பழமையான முருக வழிபாட்டுத் தலமாகும். வன்னி மன்னர்களின் காலத்திற் கட்டப்பட்டதாகக் கூறப்படும் இவ்வாலயம் போர்த்துக்கேயர் காலத்தில் இடிக்கப்பட்டது. இன்று சிறியதொரு கோயிலாக முக்கியத்துவத்தை இழந்த நிலையிலேயே இவ்வாலயம் காணப் படுகின்றது.

முள்ளியவளை கல்யாண வேலவர் ஆலயம், நெடுங்கேணி ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி கோவில் ஆகியவற்றிலும் நித்திய பூசைகளும் விசேட வழிபாடுகளும் நடைபெறுகின்றன. முள்ளிய வளையில் கந்தபுராணப் படிப்பும் இடம் பெறுகின்றது. சூரசங்காரம் சிறப்பாக நிகழ்த்திக் காட்டப்படுவது வழக்கம்.

இவற்றைவிட மன்னார், வவுனியா மாவட்டங் களிலும் முருக வழிபாட்டிடங்கள் சில காணப்படுகின்றன. இங்கெல்லாம் வெள்ளிக் கிழமைகளிலும் விசேட தினங்களிலும் பூசைகள் நடைபெறுகின்றன.

## வன்னிச் சமூகமும் வழிபாடும்

வன்னிப் பிரதேசத்தில் இருவகையான கிராமங்களைக் காணலாம்.

1. பாரம்பரியக் கிராமங்கள்
2. பட்டினவாக்கம் பெற்ற கிராமங்கள்

பாரம்பரியக்கிராமங்கள் வன்னிப்பிரதேசத்தின் கன்னிமை கழியாதவை. இவை குளமும் குளத்தோடு சேர்ந்த குடியிருப்புக்களாகவும் காணப்படுகின்றன. இக் குடியிருப்புக்கள் ஒவ்வொன்றிலும் சுமார் இருபது தொடக்கம் நூற்றைம்பது குடும்பங்கள் வரையிலேயே வாழ்கின்றன. சமூக அடிப்படையில் பெரும்பாலும் ஒவ்வொரு குடியிருப்புக்களிலும் ஒவ்வொரு சாதியினரே பெரும்பான்மையாக அல்லது தனித்து வாழ்கின்றனர். இவர்கள் தமது குடியிருப்புக்களில் உள்ள வழிபாட்டிடங்களில் தாமே பூசாரியாகச் செயற்படுகின்றனர்.

இவர்களின் பிரதான பொருளாதார நடவடிக்கையாக விவசாயம், மந்தை வளர்ப்பு, வேட்டையாடுதல் ஆகியனவே உள்ளன. இப்பொருளாதார நடவடிக்கைகள் இயற்கையைக் கட்டுப்படுத்தும் சக்திகளாகக் கருதிச் சில வழிபாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். கொடிய வெப்பு நோய்களைப் போக்கவும் வாடிய பயிர்களை வளம்படுத்தவும் மழையை வருவிக்குமாறு வேண்டிக் கண்ணகியை வழிபடுகின்றனர். இவ்வாறே வயற்காட்டில் யானைகளின் ஆபத்திலிருந்து தப்ப யானைமுகனையும், கொடிய விஷப் பாம்புகளின் அச்சத்தைப் போக்க நாகத்தையும், பேய் பிசாசுகளில் இருந்தும், காட்டு விலங்குகளிலிருந்தும் ஏற்படக் கூடிய ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றப்பட காவல் தெய்வங்களான ஐயன், வயிரவர் போன்ற தெய்வங்களையும், காட்டிலே காணாமற் போன மந்தைகளைப் பெற்றுக்கொள்ள வன்னியில் தெய்வம் போன்ற தெய்வங்களையும் வழிபடுகின்றனர். சாதி வேறுபாடோ சாஸ்திர விதிகளோ இன்றி நேரடியாகத் தாமே பூசாரியாகவும் பக்தனாகவும் நின்று வழிபட்டுவருவதே இவர்களின் வழிபாட்டு முறையாக இருந்தது. வன்னிப்பிரதேச மக்களின் விவசாய பொருளாதார வாழ்வின் தேவை இத்தகைய வழிபாட்டு மரபினை இவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது.

குளக்குடியிருப்புக்களிலிருந்து பல மைல் களுக்கு அப்பால் ஓரளவு பட்டினவாக்கம் பெற்ற கிராமங்கள் உள்ளன. இவற்றுட் சில புதிய குடியேற்றத் திட்டங் களாகவும் உள்ளன. இத்தகைய கிராமங்களில் வாழ்பவர்கள் விவசாய நடவடிக்கைகளில் மட்டுமன்றிப் பல்வேறு தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். கல்வி கற்று அரசாங்க உத்தியோகம் பார்ப்பவர்கள், பல்வேறு கைவினைத் தொழில்களில் ஈடுபடுவோர் எனப் பலவகையான மக்கள் இங்கு அருகருகே வாழ்கின்றனர். இப்பகுதிகளிலேயே பாடசாலை, வைத்தியசாலை, தபாற்கந்தோர், கிராமச் சங்கம் போன்ற சமூக நிறுவனங்கள் பலவும் அமைந்திருந்தன. இப்பகுதியில் வாழ்கின்ற அரசாங்க ஊழியர்களும் குடியேற்றவாதிகளும் பெரும்பாலும் யாழ்ப்பாணத்தவர்களாகவே இருந்தனர். இவர்களின் தொடர்பால் வன்னிப் பிரதேசத்தின் பாரம்பரியப் பண்பாட்டில் சில மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன. இம் மாற்றங்களில் ஆகம வழிபாட்டு மரபின் செல்வாக்கும் ஒன்றாகும். கிராமிய மக்களால் சுதந்திரமாக வழிபடப்பட்டுவந்த கண்ணகியம்மன் ஆகம மரபின் தாக்கத்தால் இராஜஇராஜேஸ்வரி ஆக்கப்பட்டாள். மரநிழல்களில் மட்டுமே வழிபடப்பட்ட பிள்ளையார் சுற்றுமதில்களுடன் கூடிய கோயிலுக்குள் அமர்த்தப்பட்டார். பூசாரிகளுக்குப் பதிலாக பிராமணக் குருமார் முன்னிலைக்கு வந்தனர். கண்ணகி வழிபாடும் பிள்ளையார் வழிபாடும் வன்னி மக்களின் விவசாய பொருளாதார வாழ்வின் அடிப்படையிலிருந்து உருவாகியதால் இவ் வழிபாட்டில் ஆகம மரபு தனது பிடியை இறுகப் பிடிக்க முடியவில்லை. இன்றுவரை இவ்விரு வழிபாடுகளிலும் கிராமிய வழிபாட்டு மரபும் ஆகம மரபும் கலந்தே காணப்படுகின்றன. கண்ணகியின் ஆண்டுப் பொங்கல் வழிபாட்டில் கிராமிய வழிபாட்டு மரபே முக்கியத்துவம் பெறுகின்றது.

யாழ்ப்பாணத்துச் சைவ மக்கள் மத்தியில் முருக வழிபாடும் சிவவழிபாடும் சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளன. யாழ்ப்பாண மக்களின் தொடர்பு வன்னியை அடைந்தபோது வன்னியிலும் சிவவழிபாடும் முருகவழிபாடும் இடம்பெற ஆரம்பித்தன. ஆனால் இவ்விரு வழிபாடுகளும் வன்னி மக்களின் விவசாய வாழ்வின் அடிப்படையிலிருந்து விலகி நிற்பதால் இவை இம்மக்களிடையே அத்துணை முக்கியத்துவம் பெறவில்லை. இதனாலேயே வன்னியில் பாரம்பரியக் குடியிருப்புக்களில் சிவனுக்கும் முருகனுக்கும் வழிபாட்டிடங்கள் அமைந் திருக்கவில்லை எனலாம்.